JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.557/2022
PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுமதி | தாலுகா | கடையநல்லூர் |
| கணவர் பெயர் | மாரியப்பன் | தொழில் | இல்லத்தரசி |
| கிராமம் | திருமலாபுரம் | வயது | 44 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 26.05.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது திருமலாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் உறவினர். சாட்சி மகேஸ்வரி, சங்கரலிங்கம் ஆகியோர்களை தெரியும். நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். கடந்த 9 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிக்கும் எனக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது. எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையை ஊர் பெரியவர்கள் முன்பு பேசி தீர்த்து கொண்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார்மனுவில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது. எதிரிகள் என்னை அசிங்கமாக பேசவில்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை. தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்று சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை. புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 21.05.2017 ம் தேதியன்று இரவு 08.30 மணியளவில் ஆஜர் எதிரி எங்கள் வீட்டிற்குள் அத்து மீறி நுழைந்தார் என்றால் சரியல்ல. என்னை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல, என்னையும்,

சாட்சிகள் மகேஸ்வரி மற்றும் அடைக்கலமுத்துவை அடித்து காயப்படுத்தினார் என்றால் சரியல்ல. எங்களுக்கு கொலைமிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. எதிரி மீது நடவடிக்கை எடுக்க காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi